RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1949

OPEN ACCESS

# அறப்பளீசுர சதகம் உணர்த்தும் வாழ்வியலறங்கள்

மு. வடிவேல் [அ, *], இரா. மல்லிகா [அ]

[அ] தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழக முதுகலைபட்ட மேற்படிப்பு விரிவாக்க மற்றும் ஆராய்ச்சி மையம், பெருந்துறை, ஈரோடு -638052, தமிழ்நாடு, இந்தியா

# Life Science in Arahpalisura Sathagam

**M. Vadivel [a, *], R. Mallika [a]**

[a] Department of Tamil, Bharathiar University Post Graduate Extension and Research Centre, Perundurai, Erode-638052, Tamil Nadu, India

* Corresponding Author: vadivelmurugesan96@gmail.com

Received: 31-08-2022
Revised: 04-10-2022
Accepted: 21-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

What makes man live as a man is the advice given by the ancestors and the literature which they composed. In this way Arapalisura Sathagam presents many virtues. This book leads a person to do good deeds from birth to his death. Virtues are the pillars of an individual's life. Virtue makes man good. Education teaches men to earn and to help the needy. This book indicates that educated people are good and they will achieve success. Also, a person becomes a philanthropist when he thinks to help a poor who is in distress without even caring about his own life. He who lives by supporting the people of this world is respected as equal to the gods. Virtue beautifies human life. Treating anyone as a guest at home is one of the best virtues. When a doctor treats his patients based on the medical books he learned, it is considered as a virtue. Also, Arahpalisura Sathagam provides a way to achieve salvation by performing thirty-two types of virtues.

**Keywords:** Education, Morality, Goodness, Classification, Prosperity

## முன்னுரை

அறம் அல்லது ஒழுக்கநெறி என்பது ஒருவர் சமூகத்தில் எவ்வாறு நடக்கவேண்டும் என்பது தொடர்பான கருத்தாக்கங்களை உணர்த்துகிறது. அறம் என்ற சொல் தர்மம், புண்ணியம், ஒழுக்கம், நோன்பு, தவம், ஆசாரம், சமயம் போன்ற பலவகையான சொற்களில் இடம்பெற்றாலும் மனிதன் தனக்கென வகுத்து கொண்ட வாழ்வியல் ஒழுக்க நெறிகளின் முழுமையான வடிவமே அறம் என்று கூறலாம். பொதுவாக பார்க்கின்ற பொழுது பிறவிப் பயனை பெறுவதன் மூலம் சிறந்த முக்தியை அடையலாம். எனவே, அறப்பணியே தனியொரு மனிதனை நெறிப்படுத்துகிறது. இல்லற வாழ்க்கையில் முதுகெலும்பாக அறம் அமைகின்றது.

## சிற்றிலக்கியம்

சிற்றிலக்கியத்தை பிரபந்தம் என்று அழைப்பர். பிரபந்தம் வடச்சொல்லாக இருந்தாலும் இச்சொல்லிற்கு நன்கு கட்டப்பட்டது என்ற பொருளை வெளிப்படுத்துகிறது. பிரபந்தத்தை சிறுபிரபந்தம் அல்லது சில்லறை பிரபந்தம் என்றும் அழைக்கப்படுகிறது. உறுதிப் பொருள்களான அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கனுள் ஏதேனும் ஒன்று குறையுமாயின் அவை சிற்றிலக்கியம் எனப்பெயர்

பெறுகிறது. பெரும்பாலும் சிற்றிலக்கியங்கள் கற்பனைகளால் உருவாக்கப்பட்டவையாகும். சிற்றின்பமும் பேரின்பமும் பாடுபொருளாக அமையும். சிற்றிலக்கியங்கள் பொதுவாகத் தனிப்பாடல்களின் தொகையான கலம்பகமாகவும், தொடர்நிலைச் செய்யுள் உலாவாகவும், சொற்றொடர் நிலை அந்தாதியாகவும் அமைகின்றன.

## சதக இலக்கியம்

"அகப்பொருளையோ அல்லது புறப்பொருளையோ அடிப்படையாக வைத்து யாதானும் ஒரு பொருள் மீது நூறு பாடல்களாகப் பாடப்பெறும் ஒருவகை இலக்கிய அமைப்பே சதகம்", இறைவன், வள்ளல், அரசன், குரு போன்றோரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடல்கள் இயற்றப்பெற்றுள்ளன (Jeyaraman, 2016). மக்களுக்கு தேவையான நீதி போதனைகளையும் உணர்த்துகின்றன. சமயக்கொள்கைகளைக் எடுத்துரைக்கும் சதகங்கள், வாழ்வியலைக் கூறும் சதகங்கள், நாட்டுப்புற பகுதிகளைக் கூறும் சதகங்கள், பக்தி சதகங்கள், மருத்துவம் சார்ந்த சதகங்கள் என சதகத்தின் உட்பிரிவுகளாகவும் காணப்படுகின்றன. சமுதாய நீதிகளை எடுத்துரைக்கும் நோக்கில் சில சதகங்கள் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## அறப்பளீசுர சதகம்

"அம்பலவாணக் கவிராயரால் அறப்பளீசுர சதகம் இயற்றப்பட்டது. அறப்பளீசுரனாகிய சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாகப் படைக்கப் பெற்றுள்ளது. பிறப்புகளில் உயர்ந்த பிறப்பு மனிதப்பிறப்பு போன்ற செய்தியினை வெளிப்படுத்துகிறது. நல்லறிவு, நிறைந்த கல்வி, நல்லொழுக்கம், உண்மை, வீரம், இரக்கக் குணம், அமைதிப் பயிற்சி, சமயக் கோட்பாடுகளில் நிறைவு, பற்றற்று நிற்றல்" என்னும் ஆழ்ந்த கருத்தாக்கங்களை அறப்பளீசுர சதகம் எடுத்துரைக்கின்றது (Subramanian, 2015).

## கல்வி வழியில் அறம்

ஒரு மனிதன் நல்லொழுக்க நெறியில் திகழ கல்வி வழிவகைச் செய்கிறது. கற்க வேண்டியதையெல்லாம் இளமைக் காலத்திலேயே கற்றுக்கொள்ளவேண்டும். கற்றபடி நல்வழியில் நடத்தல் வேண்டும். கடலில் கலம் கொண்டு சென்று பொருட்செல்வம் தேட வேண்டும். பெருகும் பொருளால் அறம் செய்ய வேண்டும். இதனை அறப்பளீசுர சதகமானது,

"வாலிபந் தனில்வித்தை கற்கவேண்டும் கற்ற

வழியிலே நிற்க வேண்டும்

வளைகடல் திரிந்துபொருள் தேடவேண்டும் தேடி

வளரறஞ் செய்ய வேண்டும்"

என்னும் பாடல் வரிகள் தெளிவுப்படுத்துகின்றது (Kathir Murugu, 2013). மேலும், கிடைக்கப்பெற்ற செல்வங்களைக் கொண்டு உலகில் அறச்சாலைகளை நிறுவ வேண்டும் என்ற கருத்தினை,

"ஞாலமிசை பலதருமம் நாட்டவேண்டும்"

வெளிப்படுத்துகிறது (Kathir Murugu, 2013).

## நற்குணம் உடையவர்களின் நற்பேறுகளைக் காக்கும் அறம்

பிறரை எதற்கும் நாடாமல் தன்னுடைய முயற்சியால் வாழ்பவன் சிறந்த ஆண்மகனாவான். இவ்வுலகில் உள்ள மக்களை ஆதரித்து வாழ்பவன் தேவராவான். அளவில்லாத பொருள் கொடுத்து

நூறு பேர்களைக் காப்பவன் இந்திரனாவான். உலகில் ஆயிரம் பேர்களை ஆதரிக்கும் அறக்கோட்பாடுடையவன் பிரம்மனாவான். பதினாறாயிரம் பேரைக் காத்தருள்பவன் திருமாலின் அம்சமாவான். எந்தவொரு நாளும் அளவின்றி அனைவருக்குமே உதவி செய்பவன் தேவர்களின் தலைவனாக விளங்குவான் என்பதனை,

"நன்மைதரு பதினா யிரம்பேர் தமைகாத்து

ரட்சிப்ப வன்செங்கண் மால்

நாளுமிவன் மேலதிகம் ஆகவெகு பேர்க்குதவு

நரனே மகாதேவன் ஆம்"

இப்பாடல் புலப்படுத்துகிறது (Kathir Murugu, 2013). இவ்வுலகில் உள்ள மக்களைக் காத்து வாழ்தலே அறத்தின் ஒரு கோட்பாடாகத் திகழ்கிறது.

மக்களைக் காத்து வாழ்தல் என்பது ஒரு நாட்டின் அரசனுடைய கடமையாகவும் அமைகிறது. இருப்பினும், அறக்கோட்பாடு என்ற அடிப்படையில் மக்களைக் காப்பது அறச்செயலேயாகும். இதனை பல இலக்கியங்களும் எடுத்தியம்புகின்றன.

## அறச்சிந்தனையாளன்

பிற உயிருக்கு எவ்விதத்திலும் தீங்கு செய்ய எண்ணாதவன் அறச்சிந்தனையாளனாவான். இதனை,

"அறமுளோர் என்பதைப் பூததயை யென்னும்நிலை

யதுகண்டு தான் அறிய லாம்"

என இப்பாடல்வரி செப்புகிறது. பிற உயிர்கள் மீது இரக்க குணம் கொண்டவன் மாமனிதன் என்று சொல்லலாம். தன்னுயிருக்காக பிற உயிரை துன்புறுத்துவது அறமாகாது. தன் கண்முன்னே ஓர் உயிர் துன்பத்தில் சிக்கித் தவிக்கிறது என்று தெரிந்த பின், தன்னுயிரை பொருட்படுத்தாமல் துன்பத்தில் தவிக்கும் உயிரைக் காப்பாற்ற எண்ணுவதே அறத்தின் கோட்பாடாகத் திகழ்கிறது (Kathir Murugu, 2013).

## மனதில் காக்க வேண்டிய அறம்

தனக்குக் கிடைத்திருக்கக் கூடிய செல்வம், தீமையற்ற கோள்களால் வரும் பலன், உண்டு வரும் மருந்து, குரு அருளிய வேதம், தனக்கு நிகழ்ந்த மானக்கேடு, தான் பிறருக்குக் கொடுத்த கொடை, பெருமை இவற்றையெல்லாம் மனதினுள் காக்க வேண்டிய இரகசியமாகும். இதுவே அறமாகுமென,

"சென்மித்த வருடமும், உண்டான அத்தமும்

தீதுஇல் கிரகச்சார மும்,

தின்றுவரும் அவுடதமும், மேலான தேசிகன்

செப்பிய மகாமந்த்ர மும்,

புன்மையவ மானமும், தானமும், பைம்பொன்அணி

புனையும்மட வார்கலவி யும்,

புகழ்மேவும் மானமும், இவைஒன்ப தும்தமது

புந்திக்கு ளேவைப் பதே

தன்மமென்று உரைசெய்வர்"

என்ற வரிகளின் வாயிலாக அறியமுடிகின்றன (Kathir Murugu, 2013). தான் செய்த நன்மை எல்லாம் அவ்வப்போது எடுத்துச் சொல்லி தற்பெருமையைத் தேடிக்கொள்வது அறமாகாது. அறத்திற்கு இழுக்காக அமைந்துவிடும் என்ற கருத்தினைப் புலப்படுத்துகிறது.

## அறம் என்னும் அழகு

தம்மால் இயன்றவரை அறம் செய்து வாழ்ந்தால் வீடுபேறடையலாம். அறம் புரிந்து வாழ்ந்தாலும் தாழ்ந்து போயினும் அது மனிதனுக்கு அழகு என,

"தகுதாழ்வு வாழ்வுவெகு தருமங்க ளைச்செய்து

சாரிலோ பேரழக தாம்!"

என்னும் இப்பாடல்வரி சான்றாக அமைகிறது (Kathir Murugu, 2013).

தனக்கு இல்லாத போதும் கூட வீட்டிற்கு வரும் விருந்தினருக்கு உணவளித்து உண்டனர். உதாரணமாக இளையான்குடி மாற நாயனார் வாழ்வியலைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். தண்டலையார் சதகத்திலும் கூட,

"உறவாய் வந்த

பெருவிருந்துக் குபசாரம் செய்தனுப்பி

இன்னுமெங்கே பெரியோர் என்று

வருவிருந்தோ டுண்பதல்லால்"

உறவினராக வீட்டிற்கு யார் வந்தாலும் அவர்களை உபசரித்த பின்னரே தான் உண்பர். மேலும், இனி விருந்தினர்கள் வருகிறார்களா என்று எதிர்ப்பார்த்து விட்டு உண்பர். ஆகையால், மிகப்பெரிய அளவில் பொருள் இல்லையென்றாலும் தன்னிடம் இருப்பதை வைத்து அறம் செய்தலே சிறந்த அழகாகும் என்பதை வலியுறுத்துகின்றது (Kathir Murugu, 2016).

## மருத்துவ அறம்

நாடியையும் காலத்தையும் உடலின் தன்மையையும் உணர்ந்த தன்வந்திரி, கொங்கணர், சித்தர் ஆகியோர் எழுதிய மருந்து நூல்களை முறைப்படி கற்கவேண்டும். மருந்து பொருட்களைத் தயாரிக்கும் முறைகளையும் மாத்திரை கொடுக்கும் முறைகளையும் அறிந்து உடல்நலம் சரியில்லாதவருக்கு அறம் செய்து உதவ வேண்டும். மேலும், இலேகியம், எண்ணெய் போன்றவற்றை தயாரிக்கும் முறைகளை அறிந்திருத்தல் வேண்டும். இதனை அறப்பளீசுர சதகமானது,

"பேதப் பெருங்குளிகை சுத்திவகை மாத்திரைப்

பிரயோக மோடுபஸ் மம்

பிழையாது மண்டூர செந்தூர லட்சணம்

பேர்பெறுங் குணவா கடம்

சோதித்து, மூலிகா விதநிகண் டுங்கண்டு

தூயதை லம்லேகி யம்"

எனக் குறிப்பிடுகிறது (Kathir Murugu, 2013). பல தமிழ் இலக்கிய நூல்கள் மருத்துவ முறைகளை எடுத்துச் செப்புகின்றன. மருத்துவ பெயரில் சில தமிழ் நூல்கள் காணப்படுகின்றன. களப்பிரர் காலத்தில் தோன்றிய திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி போன்ற நூல்களைச் சான்றாகக் குறிப்பிடலாம்.

## அறத்தின் வகைகள்

குழந்தைகளைப் பெற்று வளர்ப்பவர்களுக்கு வீடு கொடுத்தல், அவர்களுக்கு வேண்டிய பொருட்களைக் கொடுத்து உதவுதல், காதணி கொடுத்தல், குழந்தைகளுக்கு தினமும் பால் கொடுத்தல், சத்திரம் கட்டுதல், மடம் கட்டுதல், பசுக்களின் திமிர் நீங்கக் கல் கட்டுதல், நாவிதனுக்கு உதவுதல், துணிவெளுப்பவனுக்கு உதவுதல், கண்ணாடி கொடுத்தல், தாகம் தீர்த்தல், தலைக்கு எண்ணெய் கொடுத்தல், பசுக்களுக்குத் தீவனமிடுதல், ஆதரவற்ற பிணத்தை அடக்கம் செய்தல், குளம் வெட்டுதல், இறக்கும் நிலையிலுள்ள உயிரைக் காத்தல், உணவு கொடுத்தல் வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு கொடுத்தல், சிறையில் இருப்பவர்களுக்கு உணவு கொடுத்தல், பிறருடைய துன்பத்தைப் போக்குதல், சோலைகள் அமைத்தல், முறைப்படி திருமணம் செய்தல், விலங்குகளுக்கு உணவு கொடுத்தல், பிச்சைக்காரர்களுக்குப் பொருள் கொடுத்தல், ஆறுவகை சமயத்தவர்களுக்கு உணவு கொடுத்தல், கோயில் கட்டுதல், மருந்து கொடுத்தல், கல்வி கற்பவர்களுக்கு உதவுதல் என முப்பத்திரண்டு அறச்செயல்களாக அறப்பளீசுர சதகம் வகைப்படுத்துகிறது. இதனை,

"அறைதல்கற் போர்க்கன்னம் நாலெட்(டு) அறங்களும்முன்" நாலெட்டு என்ற சொல்லின் வழியே முப்பத்திரண்டு அறங்களை வெளிப்படுத்துகிறது (Kathir Murugu, 2013).

## நல்லறமே இல்லறம்

தந்தை, தாய், ஆசிரியன், தெய்வம், ஒழுக்கமுடைய மனைவி, உறவினர்கள், குறிப்பறிந்து வேலை செய்யும் பிள்ளைகள், தன்னிடம் அடைக்கலமாக வந்தவர்கள், தொண்டு செய்பவர்கள், முன்னோர்கள், ஏழைகள், விருந்தினர்கள், உடன்பிறந்தவர்கள், பசுக்களையும் அந்தணர்களையும் ஆதரித்தல், எப்போதும் செய்யும் கடமை என இவற்றை சரியாகச் செய்வது ஒரு மனிதனுடைய இல்லறமாகும். இதனை அறப்பளீசுர சதகமானது,

"தந்தைதாய் சற்குருவை இட்டதெய் வங்களைச்

சன்மார்க்கம் உளமனைவி யைத்

தவறாக சுற்றத்தை ஏலாத மக்களைத்

தனைநம்பி வருவோர் களைச்

சிந்தை மகிழ்வு எய்தவே பணிவிடைசெய்வோர்களைத்

தென்புலத் தோர்வறிஞ ரைத்

தீதிலா அதிதியைப் பரிவுடைய துணைவரைத்

தேனுவைப் பூசுரர் தமைச்

சந்ததம் செய்கடனை யென்றும் இவை பிழையாது

தான்புரிந் திடல்இல் லறம்"

என இல்லறத்தின் கோட்பாடுகளாக இப்பாடல் எடுத்துரைக்கின்றது (Kathir Murugu, 2013).

## முடிவுரை

மனிதன், பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழும் சமுதாயத்தில் தொண்டு செய்து வாழவேண்டும். அவ்வாறு தொண்டு செய்து வாழ்ந்தால் புகழ் வந்துச் சேரும். சொல், செயல், எண்ணம் ஆகிய மூன்று நிலைகளிலும் தடம் மாறாத தவமே அறமாகும். பிறருக்கு எல்லா வழிகளிலும் உதவிடவும், மற்ற அறநெறிகளில் ஈடுபடுவதும் முக்கியம் என்பதை உணர்ந்துதான் அறங்கள் வலியுறுத்தப்படுகின்றன. ஆகையால், நிலையான இன்பத்தைத் தருவது

அறச்செயல்களேயாகும். அவ்வகையில் அறப்பளீசுர சதகமானது அறத்தின் தன்மையை கோட்பாடுகளாக வெளிப்படுத்துகிறது. அற குணங்கள் நிறைந்த மனிதனே நற்பேறு அடைவான். ஒரு மனிதன் தன் வாழ்க்கையில் இன்னின்ன அறங்களைச் செய்யவேண்டும் என்ற கருத்தாக்கங்களை எடுத்தியம்புகிறது. இவ்வறங்கள் வாழ்க்கையில் தனிமனிதனுக்கு ஏற்ப அனைத்து சூழ்நிலைகளிலும் பொருந்துவதுடன் வையகம் செழிக்கவும் வழிவகைச் செய்வதாக அமைந்துள்ளன.

## References

Jeyaraman. N.V. (2016) Sittrilakiya Selvanga, Meiyappan pathipagam, Chidambaram, India.

Kathir Murugu, (2013) Ambalavana kavirayarin Arapalichura sathagam Moolamum Uraiyum, Saratha pathipagam, Chennai, India.

Kathir Murugu, (2016) Padikasu Pulavarin Pazhamozhi vilakkam Ennum Thandailyar sathagam Moolamum Uraiyum, Saratha pathipagam, Chennai, India.

Subramanian, S.V. (2015) Sittrilakiya kalanjiyam Thoguthi-1, Sathaga ilakiyangal, Meiyappan pathipagam, Chidambaram-608001, Tamilnadu, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License